மெட்ரோ ரயில் நிலையங்களில் தூய்மைப் பணிக்காக

# ஜெர்மனியில் இருந்து நவீன ரக இயந்திரங்கள் இறக்குமதி

■ சென்னை

சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில் தூய்மைப் பணிகளை மேற்கொள்வதற்காக, ஜெர்மனியில் இருந்து நவீன ரக இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், ஜெர்மனியில் இருந்து சிறப்பு வகை தூய்மை இயந்திரங்கள், அதிக அழுத்தம் கொண்ட தண்ணீர் பீய்ச்சி அடிக்கும் ஜெட் இயந்திரங்கள், ஈரமான தரைகளை காய வைப்பது உள்ளிட்ட நவீன ரக இயந்திரங்களை இறக்குமதி செய்துள்ளது. இந்த இயந்திரங்கள் மூலம், மெட்ரோ ரயில் நிலையத்தில் உள்ள தரைகள், லிப்ட், எஸ்கலேட்டர், கண்ணாடி ஜன்னல்கள் ஆகியவற்றைத் தூய்மைப்படுத்த முடியும்.

மேலும், ரயில் நிலையங்களில் இருந்து சேகரிக்கப்படும் குப்பைகள் மற்றும் கழிவுகளைப் பயன்படுத்தி உரம் தயாரிப்பதற்கான இயந்திரங்களையும் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, ரயில் நிலையங்களில் மக்கும், மக்காத குப்பைகளை போடுவதற்காக இரட்டை குப்பைத் தொட்டிகள் வைக்கப் பட உள்ளன.

இந்தக் குப்பைகளில் இருந்து தயாரிக்கப்படும் உரங்கள், மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள தோட்டத்தில் செடிகள் வளர்க்க பயன்படுத்தப்படும். இதன் மூலம், மெட்ரோ ரயில் நிலையங்களில் தூய்மையான, பசுமை யான சுற்றுச்சூழலை ஏற்படுத்த முடியும். மேலும், இப்பணிகளை ஒருங்கிணைக்கவும், கண்காணிக்கவும் செயலி ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளதாக மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.